**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 101** **நாள்: 20.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பாக, அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்கு கல்விச்சுற்றுலா சென்ற சென்னை பள்ளி மாணவ, மாணவியர்கள் சென்னை திரும்பினர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையும், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பும் இணைந்து Wings to Fly என்ற திட்டத்தின் மூலம் மாணவ/மாணவியர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பலவகையான அறிவியல் சார்ந்த போட்டிகளை நடத்தி மாணவ/மாணவியர்களை அயல்நாடுகளுக்கு கல்விச்சுற்றுலாவாக அழைத்து சென்று வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களின் கல்வித்திறனை மேம்படுத்தும் விதமாகவும், பல்நோக்கு பார்வையுடன் செயல்படுத்தும் விதமாக Wings to Fly, Rotary Club of Madras East அமைப்பானது, Talent Hunt Program மூலம் அவர்களுக்கு 3 சுற்றுகளாக அறிவியல் கண்காட்சி போட்டி நடத்தி, இறுதிச்சுற்றில் தேர்வு பெற்ற சென்னைப் பள்ளிகளில் பயிலும் 8 மாணவ / மாணவியர்கள் (மாணவர்கள் 5 பேர், மாணவிகள் 3 பேர்) அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்கு 04.07.2018 முதல் 14.07.2018 வரை (10 நாட்கள்) கல்விச்சுற்றுலாவாக அழைத்து செல்ல தேர்வு செய்யப்பட்டனர்.

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் ஹவுஸ்டன்னில் அமைந்துள்ள டவுன்டவுன் சுரங்கப்பாதை, டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள Bayler மருத்துவக் கல்லூரி, Brazoz Bend மாகாண பூங்கா, காக்ரல் வண்ணத்துப்பூச்சி மையம், ஹவுஸ்டன்னில் அமைந்துள்ள நேச்சுரல் சயின்ஸ் அருங்காட்சியகம் மற்றும் ஜான்சன் ஸ்பேஸ் மையம், பியர்லேண்ட் டெக்ஸாஸில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் கோயில், சே எஸ்.ஜ. பள்ளி மற்றும் அங்குள்ள தமிழ்ச்சங்கம், சேன் ஆண்டனியோவில் உள்ள Sea World சுற்றுலாத்தளம் மற்றும் ரிவர் வாக் பகுதி, சேன் ஆண்டனியோ மியூசியம் ஆஃப் சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி, சேவா இன்டர்நேஷனல் யோகா, இசை மற்றும் விளையாட்டு சார்ந்த துறை ஆகியவற்றை பார்வையிட்டு கண்டுகளித்தனர்.

மேலும், சேன் ஆண்டனியோ மாகாண மேயர் ரொனால்டு அட்ரியன் நிரன்பெர்க் அவர்களை சந்தித்து வாழ்த்தும் பெற்றனர்.

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்கு சென்று பார்வையிட்ட களிப்புடன், அனைத்து விதமான பயனுள்ள தகவல்களையும் பெற்று, மாணவ/மாணவியர்கள், உதவி கல்வி அலுவலர், Rotary Club of Madras East, Wings to Fly அமைப்பின் சார்பாக இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் பாதுகாப்புடன் பயணம் மேற்கொண்டு நலமுடன் 14.7.2018 அன்று காலை சென்னைக்கு திரும்பியுள்ளனர். இவர்களை பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறை அலுவலர்கள் இனிதே வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**